**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.176/2024

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | பாலசுப்பிரமணியன் |
| Father's Name | : | பெருமாள் நாடார் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.09.2025.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 25.12.1970 தேதியிட்ட பெரியசாமிநாடார், குருசாமி , சாமிக்கண்ணு, பூசைப்பாண்டி ஆகியோர் குத்தாலம்பிள்ளைக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பூசைப்பெருமாளின் வாரிசு சான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் வாதி தபசில் சொத்தில் வீடுகட்டியதற்கான அனுமதி உத்தரவு அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 1ம் வாதி பெயரில் உள்ள வீட்டுத்தீர்வை ரசீதுகள் அசல் (எண்ணம்–2) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து 1ம் வாதிக்கு வந்த கடிதம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 16.02.2023 தேதியில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து 1ம் வாதிக்கு வந்த கடிதம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 1ம் வாதி காவல்நிலையத்தில் கொடுத்த புகாருக்கான ரசீது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. வாதிகள் பிரதிவாதிக்கு அனுப்பிய நோட்டீஸின் அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. மேற்படி நோட்டீஸை 3,5 பிரதிவாதிகள் திருப்பி அனுப்பப்பட்ட கவர் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. மேற்படி நோட்டீஸை 1,2,4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 09.04.2009 தேதியில் தபசில்சொத்தின் ஒருபகுதியை 1,2 பிரதிவாதிகள் 3,4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. தபசில் சொத்தின் ஒருபகுதியை 2ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. புல எண்.87/1A1க்கான புலவரைபடம் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.